**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

C.C. 411 /2022

PW- 5 17-05-2024

| | |
|---|---|
| Name | ரம்யா |
| Father's/Husband's Name | வேலுச்சாமி |
| Village | மலைப்பட்டி |
| Taluk | ஓட்டப்பிடாரம் |
| Caste | – |
| Calling | விவசாயம் |
| Religion | – |
| Age | 34 |

(Accused present)

**<u>முதல்விசாரணை</u>**

1) நான் மலைப்பட்டியில் வசிக்கிறேன். நான் விவசாயம் வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள ரம்யா என்ற கையெழுத்து என்னுடைது. அந்த கையெழுத்தை நான் 02.04.2022 தேதி காலை 7 மணிக்கு வீட்டில் இருந்தபோது என் கணவரிடமும் என்னிடமும் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். **அந்த பார்வைமகசர் முழுவதும் அசா ஆ 2 ஆக ஏற்கனவே குறியீடுசெய்யப்பட்டுள்ளது** .போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனக்கு 2 குழந்தைகள் உள்ளன. பெண் குழந்தைக்கு 13 வயதும் , பையனுக்கு 4 வயதாகிறது. மேலக்காலனியில் மொத்தம் 20 வீடுகளுக்கு மேல் இருக்கும். மேலக்காலனியில் மொத்தம் 3 தெருக்கள் உள்ளன. காளிமுத்து வீட்டிற்கு வடபுறம் உள்ள தெருவில் மொத்தம் 3 வீடுகள் உள்ளன.

2) காளிமுத்து வீட்டிற்கு தென்புறம் ஒரு காலிமனையும் 2 வீடுகளும் உள்ளது. அந்த வீட்டில் ஆட்கள் இருந்தார்கள். கீழக்காலனியில் மொத்தம் 15 வீடுகள் இருக்கும். சம்பவ இடத்திற்கும் என்னுடைய வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் கூப்பிடும் தூரத்தில் உள்ளது. கீழக்காலனியில் உள்ள 15 வீடுகளிலும் ஆட்கள் இருந்தார்கள்.

3) போலிசார் வீட்டிற்கு வந்து சம்பவ இடத்தை அளக்க வேண்டும் என்று சொல்லி அழைத்து சென்றார்கள். சாட்சி கையெழுத்து போடவேண்டும் என்று சொன்னார்கள். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சம்பவ இடத்தை சுற்றியுள்ள பகுதிகளை படம் வரைந்து எழுதிகொண்டார்கள்.

4) எனக்கு சொந்த ஊர் பரிவள்ளிக்கோட்டை . திருமணமாகி 18 ஆண்டுகள் மலைப்பட்டியில் இருக்கிறேன். அதனால் எனக்கு அங்குள்ள தெருக்களைப்பற்றி நன்கு தெரியும்.

5) சம்பவமானது போலிசார் எங்களிடம் கையெழுத்து வாங்குவதற்கு 2 நாட்களுக்கு முன்பு நடைபெற்றது . சம்பவம் நடந்த பின்பு பாட்டி என் வீட்டிற்கு ரத்தத்தோடு வந்தார். ஆட்டோ பிடித்து அனுப்பிவைத்தோம். அன்று இரவு போலிசார் வரவில்லை. மறுநாள் வந்தார்களா என்று எனக்கு தெரியாது.

6) நான் பாட்டிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் சொல்லிக்கொடுத்தவாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் அங்கு வரவில்லை என்றாலும் நானும் என் கணவரும் காவல்நிலையம் சென்றோம் என்றாலும் அங்கு போலிசார் தயாரித்த பார்வைமகசரில் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றாலும் சரியல்ல.

7) போலிசார் விசாரணையின்போது மேலக்காலனியின் தெருவின் நடுவில் எனக்கு வீடு உள்ளதாக சொல்லவில்லை. நான் என் கணவரும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி